## February 11, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. பிரான்ஸ் அதிபர் இமானுவல் மேக்ரான் பிப்ரவரி 17-ஆம் தேதி மூன்று நாள் அரசுமுறைப் பயணமாக இந்தியாவுக்கு வருகிறார்.

(i) பயணத்தின் முக்கிய நிகழ்வாக பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்துப் பேசும் அவர், தில்லியில் நடைபெறவுள்ள செயற்கை நுண்ணறிவு(ஏ.ஐ.) உச்சிமாநாட்டிலும் பங்கேற்கவுள்ளார். இது தொடர்பாக மத்திய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ள தாவது:

(ii) தில்லியில் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்திக்கும் மேக்ரான், இருதரப்பு உறவை வலுப்படுத்துவது, இருதரப்பு வர்த்தகம், பொருளாதாரம், பாதுகாப்பு ஒத்துழைப்பு உள்ளிட்டபல்வேறு விஷயங்கள் குறித்துப் பேச இருக்கிறார். இதுதவிர,பிராந்திய, சர்வதேச விவகாரங்களில் இருதரப்பு நலன்கள் சார்ந்த விஷயங்கள், இந்தோ-பசிபிக்ஒத்துழைப்பு குறித்தும் இரு தலைவர்களும் விவாதிக்க இருக்கின்றனர்.

(iii) மும்பையில் நடைபெறும் ‘இந்தியா-பிரான்ஸ் புத்தாக்க ஆண்டு-2026 நிகழ்ச்சியிலும் பிரதமர் மோடி, பிரான்ஸ் அதிபர் மேக்ரான் ஆகியோர் பங்கேற்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(iv) முன்னதாக, கடந்த ஆண்டு பிப்ரவரியில் பிரதமர் மோடி பிரான்ஸ் சென்றார். அப்போது பாரீஸில் நடைபெற்ற ஏ.ஐ. மாநாட்டில் மேக்ரானுடன் இணைந்து பங்கேற்றார். இந்த ஆண்டு மாநாடு இந்தியாவில் நடைபெறவுள்ளது.

2. பறவைக் காய்ச்சல் அச்சுறுத்தல் நிலவிவரும் சூழலில், பொது மக்கள் முறையாக சமைக்காத கோழி இறைச்சியை உண்ண வேண்டாம் என மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவுறுத்தியுள்ளார்.

(i) சென்னை அடையாறில் இறந்த காகங்களை மத்திய கால்நடை ஆராய்ச்சி நிறுவனம் ஆய்வு செய்ததில், ஹெச்5 என்1 எனப்படும் பறவைக் காய்ச்சல் பாதிப்பு இருந்தது அண்மையில் கண்டறியப்பட்டது. இதையடுத்து, கண்காணிப்பைத் தீவிரப்படுத்துமாறு தமிழக தலைமைச் செயலருக்கு மத்திய அரசு அறிவுறுத்தியிருந்தது.

(ii) அதன் அடிப்படையில் மாநில சுகாதாரத் துறை பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. பறவைக் காய்ச்சலுக்குள்ளான கோழிகள், பிற பறவையினங்களிடமிருந்து மனிதர்களுக்கு தொற்று பரவ வாய்ப்புள்ளது. அதன் கழிவுகளில் இருந்து மனிதர்களுக்கும் எளிதில் பாதிப்பு பரவும். மேலும், பாதிக்கப்பட்ட பறவையிடமிருந்தோ, மனிதரிடமிருந்தோ மற்றவர்களுக்கு, ‘வெஸ்ட் நைல் வைரஸ்' பாதிப்பை கொசுக்கள் கடத்தும் என்பதால், நோய்ப் பரவல் வாய்ப்பு அதிகம் உள்ளது.

(iii) காய்ச்சல், தலைவலி, தசைப்பிடிப்பு, இருமல், மூச்சுத் திணறல் போன்றவை ஏற்பட்டால் உடனடியாக மருத்துவர்களை நாடுமாறு பொது சுகாதாரத் துறை தெரிவித்திருந்தது.

3.அமெரிக்காவின் நெருக்கடியால் கியூபாவில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக, அந்நாட்டு விமான நிலையங்களில் வெளிநாட்டு விமானங்களுக்கு எரிபொருள் நிரப்ப தடை விதிக்கப்பட்டுள்ளது.

(i) வெனிசுலாவிலிருந்து கியூபாவுக்குச் செல்லும் எண்ணெய் கப்பல்களை அமெரிக்கா தடுத்து நிறுத்தியுள்ளது. இதனால், கியூபாவின் எரிசக்தித் துறை பெரும் சரிவைச் சந்தித்துள்ளது.

(ii) தற்போதுள்ள கையிருப்பைத் தங்களின் உள்நாட்டுத் தேவைகளுக்குப் பயன்படுத்த வேண்டிய கட்டாயத்தில் கியூபா உள்ளது. எனவே, வெளிநாட்டு விமானங்கள் இனி கியூபாவில் எரிபொருள் நிரப்ப அனுமதி இல்லை என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

(iii) இந்தத் திடீர் அறிவிப்பால், வெளிநாட்டு விமானங்கள் கியூபா வந்துவிட்டு, மீண்டும் தங்கள் நாடுகளுக்குத்

திரும்புவதற்குத் தேவையான மொத்த எரிபொருளையும் புறப்படும் இடத்திலேயே நிரப்பிக்கொண்டு வரும் நிலை ஏற்பட்டுள்ளது. இது செலவுகளை அதிகரிப்பதால், ஏர் கனடா உள்ளிட்ட சில முக்கிய சர்வதேச விமான நிறுவனங்கள் கியூபாவுக்கான விமானச் சேவைகளை தற்காலிகமாக நிறுத்திவிட்டன.

(iv) பொருளாதாரத் தாக்கம்

கியூபா மக்கள் ஏற்கெனவே மின்சாரம் மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் கிடைக்காமல் தவித்து வருகின்றனர். அந்நாட்டின் வருமானத்துக்கு முக்கிய ஆதாரமாக இருப்பது சுற்றுலாத் துறைதான். தற்போது விமானச் சேவைகள் பாதிக்கப் படுவதால், சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைந்து பொருளாதாரம் மேலும் சீர்குலையும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

(v) சீனாவின் ஆதரவுக்கரம்:

இந்த நெருக்கடியான சூழலில், கியூபாவுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்யத் தயாராக இருப்பதாக சீனா அறிவித்துள்ளது.

4. செயற்கை நுண்ணறிவு (ஏஐ) மற்றும் நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி உருவாக்கப்படும் டீப்ஃபேக் உள்ளிட்ட சித்தரிக்கப்பட்ட சமூக ஊடகப் பதிவுகளுக்கு கடும் கட்டுப்பாடுகள் விதிக்கும் புதிய விதிகளை மத்திய அரசு வெளியிட்டது. இதற்காக தகவல் தொழில்நுட்ப விதிகள், 2021-இல் மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தங்கள் பிப்.20-ஆம் தேதி அமலாகிறது.

(i) இதுகுறித்து மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில் நுட்பத் துறை அமைச்சகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில், 'ஆடியோ, விடியோ அல்லது ஆடியோ-விடியோ தகவல்கள் உள்பட ஏஐ மூலம் உருவாக்கப்பட்ட பதிவுகள் அல்லது சித்தரிக்கப்பட்ட பதிவுகளுக்கான உரிய விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

(ii) ஏஐ-யால் உருவாக்கப்படும் பதிவுகளில் ஏஐ தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டுள்ளது என்ற தகவலை சேர்க்க வேண்டும். இதை சம்பந்தப்பட்ட சமூக ஊடகங்கள் (எக்ஸ், இன்ஸ்டாகிராம்) உறுதிசெய்ய வேண்டும்.

(iii) பாலியல் துன்புறுத்தல் மற்றும் குழந்தைகளை ஆபாசமாக சித்தரிக்கும் பதிவுகள், போலி ஆவணங்கள், டீப்ஃபேக் போன்ற சட்டவிரோத பதிவுகளுக்கு சமூக ஊடகங்கள் தடை விதிக்க வேண்டும்.

(iv) சட்டவிரோத பதிவுகள் என நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப் பட்டால் அந்தப் பதிவுகளை 3 மணி நேரத்தில் சமூக ஊடகங்கள் நீக்க வேண்டும். முன்பு இதற்கான காலஅவகாசம் 36 மணி நேரமாக இருந்தது.

(v) ஏஐயால் உருவாக்கப்பட்டது என பதிவில் குறிப்பிட்ட பின் அதை சமூக ஊடகங்கள் நீக்கவோ அல்லது மறைக்கவோ கூடாது' எனத் தெரிவிக்கப்பட்டது.

5. ஹெச்-1பி இசைவு நுழைவு (விசா) திட்டத்தை முழுமையாக ரத்து செய்யும் தனிநபர் சட்ட மசோதா அமெரிக்க நாடாளுமன்றத்தில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

(i) ஆளும் குடியரசுக் கட்சியின் ஃபுளோரிடா மாகாண எம்.பி.க்ரெக் ஸ்டியூப், இந்த மசோதாவை அறிமுகம் செய்தார். ஹெச்-1பி நுழைவு இசைவு திட்டத்தை முழுமையாக கைவிடும் வகையில் குடிவரவு மற்றும் குடியுரிமை சட்டத்தில் திருத்தத்தை இந்த மசோதா வலியுறுத்துகிறது.

(ii) இதுதொடர்பாக க்ரெக் ஸ்டியூப் வெளியிட்ட அறிக்கையில், ஹெச்-1பி நுழைவு இசைவு திட்டம் வெளிநாட்டு தொழிலாளர்களுக்கும் அவர்களின் நலனுக்கும் முன்னுரிமை அளிக்கிறது. அமெரிக்க குடிமக்களின் நலனும் தேசத்தின் நலனும் புறக்கணிக்கப்படுகிறது.

(iii) அமெரிக்கப் பணியாளர்களும், இளம் தலைமுறையினரும் வேலை வாய்ப்பைப் பெற முடியாத நிலை தொடர்கிறது. நமது குழந்தைகளுக்கான அமெரிக்காவின் கனவையும் பாதுகாக்க முடியாத நிலை ஏற்படுகிறது.

எனவே, வேலைவாய்ப்பில் அமெரிக்கர்களுக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் இந்த மசோதாவை அறிமுகம் செய்துள்ளேன்' என்று குறிப்பிட்டார். ஏற்கெனவே, ஹெச்-1பி நுழைவு இசைவு கட்டணத்தை அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் தலைமையிலான நிர்வாகம் பன்மடங்காக உயர்த்தியுள்ள நிலையில், இந்த மசோதா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(iv) அமெரிக்க அதிபராக இரண்டா வது முறையாகப் பதவியேற்றது முதல் பல அதிரடி நடவடிக்கைகளை டிரம்ப் மேற்கொண்டு வருகிறார்.

(v) பரஸ்பர வரிவிதிப்பு நடவடிக்கை என்ற பெயரில் இந்தியா உள்பட பல நாடுகள் மீது அதிரடி வரிவிதிப்பு நடவடிக்கையை மேற்கொண்டார்.

(vi) அடுத்ததாக, 'அமெரிக்க வேலை வாய்ப்புகளில் அமெரிக்கர்களுக்கு முன்னுரிமை' என்ற அடிப்படையில் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். அதன் ஒரு பகுதியாக ஹெச்-1பி நுழைவு இசைவுக் கட்டணம் ரூ.1.47 லட்சமாக உள்ள நிலையில், அதை ரூ.90 லட்சமாக உயர்த்தும் உத்தரவில் கடந்த ஆண்டு செப்டம்பர் 19-ஆம் தேதி டிரம்ப் கையொப்பமிட்டார்.

(vii) டிரம்ப் நிர்வாகத்தின் இந்த முடிவுக்கு அமெரிக்காவில் கடும் எதிர்ப்பு எழுந்துள்ளது. புதிய ஹெச்-1பி நுழைவு இசைவு (விசா) கட்டணத்தை ரூ.90 லட்சமாக (ஒரு லட்சம் டாலர்) உயர்த்தும் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் தலைமையிலான அரசு நிர்வாகத்துக்கு எதிராக அங்குள்ள 19 மாகாணங்கள் வழக்கு தொடர்ந்துள்ளன.

(viii) உலகம் முழுவதும் இருந்து பல்வேறு துறை சார்ந்த திறமையான பணியாளர்களைத் தேர்வு செய்து அவர்களுக்குப் பயிற்சி அளித்து பணி வழங்க அமெரிக்க நிறுவனங்கள் ஹெச்-1பி நுழைவு இசைவைப் பயன்படுத்தி வருகின்றன.

(ix) இந்த ஹெச்1-பி நுழைவு இசைவு மூலம் இந்தியர்களே அதிக எண்ணிக்கையில் அமெரிக்காவில் வேலைவாய்ப்பைப் பெற்று பயனடைந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

6. 2025-ஆம் ஆண்டுக்கான ஊழல் மிகுந்த நாடுகள் (ஊழல் கண்ணோட்ட குறியீடு) தரவரிசைப் பட்டியலில் இந்தியா 5 இடங்கள் முன்னேறி 91-ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

(i) இந்த தரவரிசையில் கடந்த ஆண்டு 96-ஆவது இடத்தில் இருந்த இந்தியா, நிகழாண்டில் முன்னேற்றம் கண்டுள்ளது.

(ii) சட்டத்தின்படி ஆட்சி செய்து ஊழலை எதிர்த்துப் போராடும் நாடுகள் குறித்து ஆய்வுகளை மேற்கொண்டு வரும் ஜெர்மனியின் பெர்லினைச் சேர்ந்த 'டிரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல்' அமைப்பு ஊழல் தரவரிசைப் பட்டியல் ஆண்டுதோறும் வெளியிட்டு வருகிறது. ஊழலற்ற நிர்வாகம் மற்றும் ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகளின் அடிப்படையில் ஆய்வில் பங்கேற்கும் நாடுகளுக்குப் புள்ளிகள் வழங்கப்படும்.

(iii) இதில் 100 புள்ளிகள் பெற்ற நாடுகள் ஊழலற்ற நாடுகளாகவும், 0 புள்ளி என்பது ஊழல் மிகுந்த நாடுகளாகவும் கருதப்படும்.

(iv) மொத்தம் 182 நாடுகள் இடம்பெற்றிருந்த 2025-ஆம் ஆண்டுக்கான தரவரிசைப் பட்டியலை இந்த அமைப்பு வெளியிட்டது.

(v) அதில், இந்தியா 39 புள்ளிகள் பெற்று 91- ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. கடந்த ஆணடு 38 புள்ளிகளுடன் 96-ஆவது இடத்திலிருந்தது.

(vi) பட்டியலில் 89 புள்ளிகளுடன் ஊழலற்ற நாடாக டென்மார்க் முதலிடத்தில் உள்ளது. ஃபின்லாந்து (88), சிங்கப்பூர் (84) ஆகியவை அடுத்தடுத்த இடங்களைப் பிடித்துள்ளன.

(vii) பட்டியலில் 9 புள்ளிகளுடன் ஊழல் மிகுந்த நாடுகளாக சோமாலியா மற்றும் தெற்கு சூடான் நாடுகள் 181-ஆவது இடத் தில் உள்ளன. 10 புள்ளிகளுடன் வெனிசுலா 180-ஆவது இடத்தில் உள்ளது. பாகிஸ்தான் 28 புள்ளிகளுடன் 136-ஆவது இடத்தில் உள்ளது.

(viii) அமெரிக்கா 64 புள்ளிகளுடன் 29-ஆவது இடத்திலும், சீனா 43 புள்ளிகளுடன் 76- ஆவது இடத்திலும், ரஷியா 22 புள்ளிகளுடன் 157-ஆவது இடத்திலும் உள்ளன.

(ix) ஊழல் குறித்து செய்தி சேகரிக்கும் பத்திரிகையாளர்களுக்கு அச்சுறுத்தல் உள்ள நாடுகளுக்கான இதன் பட்டியிலில் இந்தியாவும் இடம்பெற்றுள்ளது. ஊழல் கண்ணோட்ட குறியீடு புள்ளிகள் 50-க்கும் குறைவாக உள்ள பிரேசில் (35), இந்தியா (39), மெக்சிகோ (27), பாகிஸ்தான் (28), ஈராக் (28) உள்ளிட்ட நாடுகளில் 90 சதவீத பத்திரிகையாளர் கொலைகள் நடைபெற்றுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

7. பட்டியலின பிரிவினர் (எஸ்சி) மற்றும் பழங்குடியின பிரிவினரில் (எஸ்டி) கிரீமி லேயர் (சமூக பொருளாதார நிலையில் முன்னேறியவர்கள்) வகைப்படுத்தப்பட்டு அவர்களுக்கு இடஒ துக்கீடு சலுகைகளை ரத்து செய்ய வேண்டும் என தாக்கல் செய்த மனுக்கள் மீது மத்திய அரசு பதிலளிக்க உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது.

(i) இந்திரா சஹானி தீர்ப்பின்படி இதர பிற்படுத்தப்பட்ட பிரிவினரில் (ஓபிசி) பொருளாதார ரீதியாக முன்னேறியவர்களை கிரீமி லேயராக பிரித்து அவர்களுக்கான சலுகைகள் ரத்துசெய்யப்பட்டன.

(ii) அதேபோன்று எஸ்சி மற்றும் எஸ்டி பிரிவிலும் கிரீமி லேயர் வகைப்படுத்தப்பட்டு அவர்களுக்கு இட ஒதுக்கீடு சலுகைகளை ரத்து செய்யக்கோரி ஓ.பி.சுக்லா மற்றும் சம்தா அந்தோலன் சமிதி என்ற அமைப்பு சார்பில் உச்சநீ திமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

(iii) அந்த மனுக்களில், 'பொது வேலைவாய்ப்பு மற்றும் கல்வியில் இடஒதுக்கீடு வழங்க எஸ்சி மற்றும் எஸ்டி சமூகத்தினரில் உட்பிரிவை ஏற்படுத்த மாநிலங்களுக்கு அதிகாரமுள்ளது என கடந்த 2024, ஆக.1-ஆம் தேதி உச்சநீதிமன்றத்தின் 7 நீதிபதிகளைக் கொண்ட அரசியல்சாசன அமர்வு 6:1 என்ற பெரும்பான்மையில் தீர்ப்பு வழங்கியது. எஸ்சி மற்றும் எஸ்டி பிரிவில் கிரீமி லேயர் வகைப்படுத்தப்பட்டு அவர்களில் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இடஒதுக் கீடு சலுகைகள் சென்றடைவதை உறுதிசெய்யவும் அந்த தீர்ப்பில் குறிப்பிடப்பட்டது.

(iv) அதனை பின்பற்றி மத்திய மற்றும் மாநில அரசுகள் தரவுகளை சேகரிக்கும் பணிகளை தொடங்கவும் கிரீமி லேயர் வகைப்பாட்டுக்கான அளவுகோல்களை வரையறுக்கவும் உத்தரவிட வேண்டும்' எனத் தெரிவிக்கப்பட்டன.

(v) இந்த மனுக்களை விசாரித்த உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சூர்ய காந்த் மற்றும் நீதிபதிகள் ஜயமால்ய பாக்சி, என்.வி.அஞ்சாரியா ஆகியோர் அடங்கிய அமர்வு இது தொடர்பாக மத்திய அரசு பதிலளிக்க உத்தரவிட்டது.

8. வங்கித் துறையில் அந்நிய நேரடி முதலீட்டு வரத்து 2025-ஆம் நிதியாண்டில் ரூ.1,041 கோடியாக (115 மில்லியன் டாலர்) குறைந்ததாக மாநிலங்களவையில் மத்திய நிதித் துறை இணையமைச்சர் பங்கஜ் சௌதரி தெரிவித்தார்.

(i) கடந்த 2023-ஆம் நிதியாண்டில் இது ரூ.8,129 கோடியாக (898 மில்லியன் டாலர்) இருந்த நிலையில் சரிவடைந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

(ii) இதுகுறித்து மாநிலங்களவையில் அவர் அளித்த எழுத்துபூர்வ பதிலில் கூறப்பட்டிருப்பதாவது: மொத்த அந்நிய நேரடி முதலீட் டில் (எஃப்டிஐ) பங்குகளில் முதலீடு, வெளிநாட்டு முதலீட்டாளர்களின் பங்கு மூலதனம், மறு முதலீடு செய்யப்பட்ட வருவாய் மற்றும் பிற மூலதனம் ஆகியவை அடங்கும்.

(iii) பொருளாதார வளர்ச்சிக்கு கடன் அல்லாத நிதிக்கான முக்கிய ஆதாரமாக எஃப்டிஐ விளங்குகிறது. தாராளமயமாக்கல் கொள்கைக்குப் பிறகு இந்தியாவில் எஃப்டிஐ அதிகரித்து வருகிறது.

(iv) அந்நிய மூலதனத்தில் முக்கிய பங்களிப்பைக் கொண்ட எஃப்டிஐ தொழில்நுட்பப் பரிமாற்றம், புத்தாக்கம், வேலைவாய்ப்பு உருவாக்கம் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் வளர்ச்சிக்கு வித்திடுகிறது.

(v) 2024-25-ஆம் நிதியாண்டில் பாரத ஸ்டேட் வங்கியில் 11.07 சதவீதம், கனரா வங்கியில் 10.55 சதவீதம், பரோடா வங்கியில் 9.43 சதவீதம், யூனியன் பேங்க் ஆஃப் இந்தியாவில் 7.48 சதவீதம், பஞ்சாப் தேசிய வங்கியில் 5.85 சதவீதம் என அந்நிய பங்குகள் உள்ளன. இதில் எஃப்டிஐ, வெளிநாட்டு நிறுவன முதலீடு (எஃப்ஐஐ), வெளிநாடுவாழ் இந்தியர்கள் முதலீடு (என்ஆர்ஐ), வெளிநாடுகளில் வசிக்கும் இந்தியர்களின் நிறுவன முதலீடு (ஓசிபி) உள்ளிட்டவை அடங்கும்.

(vi) ஒட்டுமொத்தமாக 2023-ஆம் நிதியாண்டில் வங்கித் துறையில் எஃப்டிஐ வரத்து ரூ.8,129 கோடியாக இருந்த நிலையில் 2025- ஆம் நிதியாண்டில் ரூ.1,041 கோடியாக குறைந்தது எனத் தெரிவிக்கப்பட்டது.

(vii) மற்றொரு கேள்விக்கு பங்கஜ் சௌதரி அளித்த எழுத்து பூர்வ பதிலில், '2026, ஜனவரி 2- ஆம் தேதி நிலவரப்படி பிரதமரின் முத்ரா கடன் திட்டத்தின் கீழ் 56.31 கோடி கணக்குகளுக்கு ரூ.37.31 லட்சம் கோடி கடனுதவி வழங்கப்பட்டுள்ளது' எனத் தெரிவிக்கப்பட்டது.

(viii) உரிமை கோரப்படாத வங்கி டெபாசிட்டுகள் ரூ.72,454 கோடி

- 10 ஆண்டுகளாக செயல்படாமல் உள்ள சேமிப்பு மற்றும் நடப்பு வங்கிக் கணக்குகளில் உள்ள இருப்புத் தொகை அல்லது முதிர்வடைந்த தேதியில் இருந்து 10 ஆண்டுகளுக்குள் உரிமை கோரப்படாத வைப்புத் தொகையானது உரிமை கோரப்படாத டெபாசிட்டுகளாக கருதப்படும். அந்த டெபாசிட்டுகளை வைப்புத்தொகைதாரர் கல்வி மற்றும் விழிப்புணர்வு நிதியில் வங்கிகள் சேர்த்துவிடும். இந்த நிதித் தொகையை ரிசர்வ் வங்கி பராமரித்து வருகிறது.
- இந்நிலையில், கடந்த ஜன.28-ஆம் தேதி நிலவரப்படி, பொதுத் துறை வங்கிகளில் உரிமை கோரப்படாத ரூ.60,571.02 கோடி, தனியார் வங்கிகளில் உரிமை கோரப்படாத டெபாசிட் ரூ.9,607.76 கோடி, இந்தியாவில் செயல்பட்டு வரும் வெளிநாட்டு வங்கிகளில் கோரப்படாத ரூ.2,275.01 கோடி என மொத்தம் ரூ.72,454 கோடி இந்த நிதியில் சேர்க்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

9. இந்தியா-அமெரிக்கா இடையே மேற்கொள்ளப்பட உள்ள இடைக்கால வர்த்தக ஒப்பந்தம் மூலம், அந்நாட்டில் இருந்து இந்தியாவுக்கு பருப்பு வகைகள் உள்ளிட்ட வேளாண், உணவுப் பொருள்கள் ஏற்றுமதி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளதாக வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(i) சில குறிப்பிட்ட பருப்பு வகைகளுக்கு இந்தியா எந்த வரியும் விதிக்காது என்றும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ii) அதில் அமெரிக்காவில் இருந்து சில பருப்பு வகைகளை வரி எதுவும் விதிக்காமல் இந்தியா இறக்குமதி செய்யும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(iii) அந்த அறிக்கையில், அமெரிக்காவின் பல பண்ணை மற்றும் உணவுப் பொருள்களுடன் சேர்த்து தொழில் துறை சரக்குகள், குறிப்பிட்ட சில தானியங்கள் மீதான வரியையும் இந்தியா நீக்கவோ, குறைக்கவோ செய்யும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் சிவப்பு சோளம், பதப்படுத்தப்பட்ட பழங்கள், சோயாபீன் எண்ணெய், ஒயின் உள்ளிட்டவை அடங்கும்.

(iv) முன்பு பயறு வகைகளை மட்டும் குறிப்பிட்ட அளவு குறைந்த வரியுடன் இறக்குமதி செய்ய ஒப்பந்தம் மூலம் வழிவகை செய்யப்பட்டிருப்பதாக மத்திய வர்த்தக அமைச்சகம் தெரிவித்தது. இந்த நடவடிக்கை இந்திய விவசாயிகளுக்குக் காலப்போக்கில் பாதிப்பை ஏற்படுத்தும் என்று விவசாய குழுக்கள் விமர்சித்த நிலையில், தற்போது சில பருப்பு வகைகளையும் இந்தியா இறக்குமதி செய்யும் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

(v) ஒப்பந்தத்தின் மூலம், அடுத்த 5 ஆண்டுகளில் அமெரிக்காவில் இருந்து இந்தியாவுக்கு 500 பில்லியன் டாலர்

(சுமார் ரூ.45 லட்சம் கோடி) மதிப்பிலான பொருள்களை ஏற்றுமதி செய்யத் திட்டமிடப்பட்டுள்ள நிலையில், அந்த ஏற்றுமதியில் வேளாண் மற்றும் உணவுப் பொருள்களும் இடம்பெற்றுள்ளது அமெரிக்காவின் புதிய அறிக்கையில் தெரியவந்துள்ளது.

(vi) முன்னதாக வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில், அமெரிக்காவிடம் இருந்து 500 பில்லியன் டாலர் மதிப்பில் எரிசக்தி பொருள்கள், விமானம் மற்றும் விமான பாகங்கள், விலை மதிப்பற்ற உலோகங்கள், தொழில்நுட்ப சரக்குகள் உள்ளிட்டவற்றை மட்டுமே இந்தியா இறக்குமதி செய்ய உள்ளதாகத் குறிப்பிடத்தக்கது.

10. தமிழகம் முழுவதும் குழந்தைகள், 30 வயது வரை உள்ள பெண்கள் என 2.56 கோடி பேருக்கு குடற்புழு நீக்க மாத்திரைகள் வழங்கும் திட்டத்தை மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்.

(i) தேசிய குடற்புழு நீக்க தினத்தை முன்னிட்டு சென்னை சைதாப் பேட்டை மாந்தோப்பு பெண்கள் அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற விழாவில், விழிப்புணர்வு பதாகைகளை வெளியிட்ட அமைச்சர் மா.சுப்பிர மணியன், மாணவர்களுடன் உறுதி மொழி ஏற்று, அவர்களுக்கு குடற்புழு நீக்க மாத்திரைகளை வழங்கினார்.

(ii) ஒவ்வோர் ஆண்டும் பிப்ரவரி, ஆகஸ்ட் மாதங்களில் தேசிய குடற்புழு நீக்க தினம் கடைப்பிடிக்கப்படுகிறது. அதன்படி, 19 வயது வரை உள்ள குழந்தைகள் மற்றும் சிறார்கள், 20-30 வயது வரை உள்ள பெண்கள் என மொத்தம் 2.56 கோடி பேர் பயனடையும் வகையில் அல்பெண்டாசோல் குடற்புழு நீக்கம் மாத்திரைகள் விநியோகிக்கும் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

(iii) அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள், அங்கன்வாடி மையங்கள், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள், தனியார் பள்ளிகள், அனைத்து கல்லூரிகளிலும் குடற்புழு நீக்க மாத்திரைகள் வழங்கப்பட்டன. விடுபட்டவர்களுக்கும் அவை வழங்கப்படும். இதற்கான பணிகளில் 1,30,000 அரசுத் துறையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

(iv) குடற்புழு என்பது ஓர் ஒட்டுண்ணி. இது மனிதனின் குடற் பகுதியில் உள்ள ரத்தத்தை உறிஞ்சி வாழும். நீண்டகாலமாக குடற்புழு நோயினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு ரத்த சோகை, உடல் வளர்ச்சி பாதிப்பு, செயல்திறன் குறைபாடு போன்றவை ஏற்படும்.

(v) குடற்புழுக்கள் உருவாவதைத் தவிர்க்க திறந்த வெளியில் மலம் கழிப்பதை தவிர்த்து கழிப்பறையை பயன்படுத்த வேண்டும். ஈக்கள் மொய்க்காமல் சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும். காய்கறிகள் மற்றும் பழங்களை கழுவிய பிறகுதான் உட்கொள்ள வேண்டும். சுத்தமான குடிநீரை பயன்படுத்த வேண்டும். உணவுக்கு முன்பும், கழிவறையைப் பயன்படுத்திய பிறகும் கைகளை சுத்தமாக கழுவும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்றார் அவர்.

11. குற்றவியல் புலனாய்வில் AI தொழில்நுட்பம்

(i) புலனாய்வின் வரலாற்று அடித்தளம்

- ஆரம்பகால மனித வரலாற்றில், உடல் ரீதியான பாதுகாப்பு மற்றும் சமூக விதிமுறைகள் "குற்றங்களை" கையாள்வதற்கான முதன்மை வழிமுறைகளாக இருந்தன, இருப்பினும் இந்த நடவடிக்கைகள் இன்று இருப்பது போல் சட்டப்பூர்வமாக வரையறுக்கப்படவில்லை.
- 19 ஆம் நூற்றாண்டு கைரேகை பகுப்பாய்வு, டிஎன்ஏ சோதனை மற்றும் பிரேத பரிசோதனைகள் போன்ற நிறுவப்பட்ட அறிவியல் முறைகளை அறிமுகப்படுத்தியது, அவை நவீன குற்றவியல் விசாரணைக்கு அடிப்படையாக அமைந்தன.
- புதிய டிஜிட்டல் அச்சுறுத்தல்கள்: நவீன யுகம் சைபர் கிரைம், அடையாள திருட்டு, நிதி மோசடி மற்றும் "டீப்ஃபேக்" தொழில்நுட்பம் உள்ளிட்ட அதிநவீன அச்சுறுத்தல்களைக் கொண்டு வந்துள்ளது, பாரம்பரிய முறைகளை விட மேம்பட்ட கருவிகள் தேவைப்படுகின்றன.

(ii) சட்ட அமலாக்கத்தில் AI இன் முக்கிய பயன்பாடுகள்

- முன்னறிவிப்பு காவல்: குற்ற இடங்கள், நேரங்கள் மற்றும் வடிவங்கள் தொடர்பான வரலாற்றுத் தரவை பகுப்பாய்வு செய்வதன் மூலம், எதிர்கால குற்றங்கள் எங்கு நிகழக்கூடும் என்பதைக் கணித்து, காவல்துறைக்கு முன்கூட்டியே எச்சரிக்கைகளை வழங்க முடியும்.
- முக அங்கீகாரம்: AI அமைப்புகள் பொது இடங்களில் கூட்டத்தை ஸ்கேன் செய்து தேடப்படும் குற்றவாளிகளை அல்லது மீண்டும் மீண்டும் குற்றவாளிகளை அடையாளம் காண, ஏற்கனவே உள்ள தரவுத்தளங்களுடன் முகங்களை பொருத்துவதன் மூலம் முடியும்.
- நிதி மோசடி கண்டறிதல்: வங்கி, ஆன்லைன் பரிவர்த்தனைகள் மற்றும் மின்னஞ்சல்களில் சந்தேகத்திற்கிடமான வடிவங்களை AI உடனடியாகக் கண்டறிந்து, பெரிய இழப்புகள் ஏற்படுவதற்கு முன்பு சாத்தியமான மோசடி குறித்து அதிகாரிகளை எச்சரிக்கும்.
- சமூக ஊடக கண்காணிப்பு: வெறுப்பு பேச்சு, அச்சுறுத்தல்கள் அல்லது ஒழுங்கமைக்கப்பட்ட கலவரங்களின் அறிகுறிகளைக் கண்டறிய சமூக ஊடக இடுகைகளை AI பகுப்பாய்வு செய்கிறது, வன்முறையைத் தடுக்க உதவுகிறது.
- போக்குவரத்து மேலாண்மை: விபத்துக்கள், வேகம் மற்றும் குடிபோதையில் வாகனம் ஓட்டுதல் பற்றிய நிகழ்நேரத் தரவை AI கண்காணிக்கிறது, போக்குவரத்து அதிகாரிகளுக்கு நடவடிக்கை எடுக்கக்கூடிய தகவல்களை வழங்குகிறது.
- விரைவான வீடியோ பகுப்பாய்வு: AI சில நிமிடங்களில் மணிநேர CCTV காட்சிகளை செயலாக்க முடியும், சந்தேகத்திற்கிடமான நபர்கள் அல்லது வாகனங்களை அடையாளம் காண மனிதர்கள் பல நாட்கள் ஆகும்.

(iii) குறிப்பிடத்தக்க அபாயங்கள் மற்றும் மனித மேற்பார்வை

AI ஒரு சக்திவாய்ந்த கருவியாக இருந்தாலும், அது பிழைகளுக்கு ஆளாகிறது மற்றும் மனித தீர்ப்பை மாற்ற முடியாது:

- தவறான அடையாளங்கள்: AI-இல் உள்ள தவறான தரவு அல்லது தொழில்நுட்ப குறைபாடுகள் அப்பாவி குடிமக்களை தவறாக கைது செய்ய வழிவகுக்கும். வழக்கு ஆய்வு (டெட்ராய்ட், 2020): தவறான AI முக அங்கீகார பொருத்தத்தின் அடிப்படையில் ஒரு கடிகாரத் திருட்டுக்காக ராபர்ட் வில்லியம்ஸ் என்ற நபர் தவறாக கைது செய்யப்பட்டார். தான் குற்றமற்றவர் என்பது நிரூபிக்கப்பட்ட பிறகு, அவர் காவல்துறை மீது வழக்குத் தொடர்ந்தார், அவருக்கு $300,000 (தோராயமாக ₹2.5 கோடி) இழப்பீடு வழங்கப்பட்டது.

AI என்பது இறுதி முடிவெடுப்பவராகக் கருதப்படுவதற்குப் பதிலாக ஒரு துணை தொழில்நுட்பமாகக் கருதப்பட வேண்டும். நீதியின் கருச்சிதைவுகளைத் தடுக்கவும், தனிப்பட்ட உரிமைகளைப் பாதுகாக்கவும் AI-உருவாக்கிய முடிவுகளைச் சரிபார்க்க மனித நுண்ணறிவு (Human Intelligence) அவசியம்